வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.05.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 138 பக்கங்கள் : 12

# இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் உயர் பதவிகளில்!

## தமிழர்கள் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலையில்

### அவுஸ்திரேலிய செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ் கருத்து



கொழும்பு, மே. 17

இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள்இன்றுவரை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர் பதவிகளில் உள்ளனர் என தெரிவித்துள்ள அவுஸ்திரேலியாவின் கிறீன் கட்சியின் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ், இன்றுவரை தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் - ஒடுக்குமுறையை எதிர்கொள்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். 11

## வடக்குக்கு 24ஆம் திகதி வருகின்றார் ஜனாதிபதி!

### வைத்தியசாலைகளில் கட்டடங்களை திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்பார்

யாழ்ப்பாணம், மே. 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஒரு பகுதியாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் 11

முள்ளிவாய்க்கால் கஞ்சி:

## தடையை நீக்கியது மூதூர் நீதிமன்றம்!

திருகோணமலை, மே 17

முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை மூதூர் நீதிமன்றம் நீக்கியுள்ளது. அத்துடன், கைது செய்யப்பட்ட நால்வரையும் விடுதலை செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி சேனையூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கிய பெண் 11

## ரஷ்யாவுக்கு விரையும் உயர்மட்ட தூதுக்குழு!

கொழும்பு, மே. 17

ரஷ்ய - உக்ரைன் போரில் தொடர்புபட்டிருக்கும் இலங்கையர்கள் குறித்து ஆராய்வதற்காக விசேட துதுக்குழுவொன்றை ரஷ்யாவிற்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் 11



## சிரட்டையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பருகிய இராணுவத்தினர்!

கிளிநொச்சி, மே. 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, நேற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில், பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, பொது மக்கள் மட்டுமன்றி வீதியில் பயணித்த இராணுவத்தினரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்று பருகினர். 11

ஜனாதிபதித் தேர்தல்

## ஜூன் முதல் வாரத்தில் ரணிலின் நிலைப்பாடு?

கொழும்பு, மே. 17

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார் என அறியமுடிகின்றது.

பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தியே ரணில் இந்த அறிவிப்பை வெளியிடவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா அல்லது இல்லையா என்பதை விரைவில் 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி ஜூலை 4இல் மீள அகழப்படும்!

### முல்லைத்தீவு நீதிமன்றம்

முல்லைத்தீவு, மே 17

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை தோண்டும் பணி ஜூலை 4ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நேற்றைய தினம் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மனிதப் புதைகுழி அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளதாக முல்லைத்தீவு 11

## உயர்தர வகுப்புகள் ஜூன் 4இல் ஆரம்பம்

கொழும்பு, மே 17

அண்மையில் நடந்து முடிந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகள் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு நேற்று விடுத்த சுற்று நிருபத்திலேயே இந்த விடயம் 11

## மன்னிப்பு சபையின் செயலர் நேற்று இலங்கை வந்தார்!

### முள்ளிவாய்க்காலுக்கும் வருவார்



கொழும்பு, மே 17

சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலா மார்ட் நேற்று வியாழக்கிழமை இலங்கை வந்தார்.

இலங்கை வந்துள்ள அக்னெஸ் நாளைய தினம் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கேற்பார் என்று சர்வதேச மன்னிப்பு சபை அறிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபையின் செயலளார் அக்னெஸ் கலாமார்ட் தெற்காசியாவுக்கு வருவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

நேற்றைய தினம் இலங்கை வந்துள்ள அவர் எதிர்வரும் 24ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பாராளுமன்றம் கலைக்கப்படாது

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

நாட்டில் சிறந்த சூழல் நிலை நிறுத்தப்பட்ட பின்னர் உரிய நேரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "இலங்கை, ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயல்படும் நாடு. பல சந்தர்ப்பங்களில் வன்முறைகள், கலவரங்கள் தோற்றம் பெற்றுள்ளன. 11

கார் பந்தய விபத்து:

## காயமடைந்த சிறுமி மரணம்

கொழும்பு, மே 17

கார் பந்தயத்தின்போது பார்வையாளர்கள் மத்தியில் புகுந்த காரால் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த சிறுமி ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8ஆக உயர்ந்துள்ளது.

பதுளை - வெலிமடையை சேர்ந்த 16 வயதான சிறுமியே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக்க குமார தெரிவித்தார்.

பதுளை - தியத்தலாவையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி பொக்ஸ்ஹில் கார் பந்தயம் நடைபெற்றது. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

முள்ளிவாய்க்காலில் நடந்தது பேரவலம். அதைத்தான்,

"தமிழ் மக்கள் மிகக்கொடூரமாக கொன்று அழிக்கப்பட்டு 15ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவு கூருகின்ற இந்தத் தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18ஐ தமிழ்த் தேசிய துக்க நாளாக கடைப்பிடிப்போம்" என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நடந்தது ஓர் இனப்படுகொலைதான் என்பதை தமிழ் மக்கள் உரத்துச் சொல்லி வருகின்றனர். இதுவரை கனடா மாத்திரமே அதனை ஓர் இனப்படுகொலை என்று ஏற்றுக்கொண்டிருந்தாலும் முழு உலகமும் அதனை ஏற்றுக்கொள்ளும் நாட்களுக்காகவே தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பதினைந்தாவது ஆண்டு நினைவு வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்ற அதே வேளை, அதனை எந்தவகையிலும் குழப்புவதற்கும் அரச இயந்திரம் தீவிரமாக செயல்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் தமது கடைசி நாட்களில் வெறும் அரிசியை கடல் நீரில் வேகவைத்து கஞ்சியையே குடித்துக்கொண்டு உயிர் வாழ்ந்து மடிந்தார்கள் என்பதை உலகுக்கும் அடுத்த சந்ததியினருக்கும் கடத்திச் செல்வதற்காகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கப்படுகின்றது.

அதனை - அதாவது அந்த தேங்காய் சிரட்டையை ஞாபகப்படுத்துவதற்காகவே சிரட்டை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பாராளுமன்ற நூதனசாலையில் பத்திரப்படுத்துங்கள் என்று தமிழ் அரசு எம். பி. சிவஞானம் சிறீதரன் அவர்கள் கடந்த வாரம் கேட்டிருந்தார்.

வடக்கு - கிழக்கு எங்கும் முள்ளிவாய்க்கால் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் நடந்துவருகின்றன. மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய நால்வரைப் பொலிஸார் கைதுசெய்து சிறையில் வைத்திருக்கின்றனர்.

அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று சுகாதார முறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பது. ஆனால், அடுத்த வாரம் வெசாக் வாரம். நாடு முழுவதும் ஆங்காங்கே வெசாக்கை ஒட்டிய உணவு விநியோகம் நடக்கவிருக்கின்றது. அவையெல்லாவற்றையும் பொலிஸார் சுகாதார முறைகளின்படி நடக்கின்றனவா என்பதை பரிசோதித்து யாரையாவது கைது செய்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அதுவல்ல இன்று நாம் சொல்லவருவது,

இதுகாலவரை முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலைதான் என்றும் அந்தப் படுகொலைகளுக்கான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் உரக்கச் சொல்லிவந்த புலம்பெயர் அமைப்புகளில் ஒன்று உலகத் தமிழர் பேரவை. அந்த அமைப்பு கடந்த வருடம் சில பௌத்த துறவிகளுடன் சேர்ந்து இமாலய பிரகடனத்தை வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்காக சர்வதேச விசாரணை தேவை என்றும் போராடி வந்த உலகத் தமிழர் பேரவை இமாலய பிரகடனம் வெளியிட்ட பின்னரும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நாடு முழுவதும் பிரசாரம் செய்யப்போவதாகவும் கூறியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால், அப்படி எதுவும் நடந்ததாக இதுவரை தெரியவரவில்லை.

இப்போது, அந்தப் பிரகடனத்தை வெளியிட்ட பௌத்த துறவிகளின் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்துடனும் சில அமைப்புகளுடனும் இணைந்து மே 17ஆம் திகதி கொழும்பில் விகாரமாதேவி பூங்காவில் புத்தர் சிலைக்கு அருகில் பிரார்த்தனை வைபவம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் பலியானவர்களை தெற்கில் அதுவும் பௌத்த துறவிகளின் அமைப்புடன் சேர்ந்து நினைவு கூருவது நல்ல விடயம்தான் என்ற மகிழ்ச்சியுடன் அது தொடர்பான அறிவித்தலை படித்தபோதுதான், அதன் பின்னணியில் இருக்கின்ற சூட்சுமத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

"வடக்கிலும் தெற்கிலும் மரணித்தவர்கள் நம்மவர்களே. எம் தாய் நாட்டில் தம் உயிரை இழந்த அவர்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையோடு - மௌனம் செலுத்தி - அஞ்சலி செய்ய வாருங்கள் கைகோப்போம்" என்று அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பது தமிழ் மக்கள் வகைதொகையின்றி படுகொலை செய்யப்பட்ட நாட்களை நினைவுகூருவதற்கான காலம். அதனை பேரில் இறந்த உறவுகளின் - அதாவது வடக்கிலும் தெற்கிலும் உயிரிழந்தவர்களின் நினைவேந்தலாக மடைமாற்றம் செய்ய முயற்சி நடக்கின்றதா? என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

- ஊர்க்குருவி.

## யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் விடயத்தில் உணர்வுபூர்வமாக செயல்பட வேண்டும்

### சகல சமூகங்களிடத்திலும் கருஜெயசூரிய கோரிக்கை

கொழும்பு, மே 17

யுத்த காலத்தில் உயிரிழந்தவர்கள், காணாமல் போனவர்கள் விடயத்தில் ஒட்டுமொத்த சமூகமும் உணர்வுபூர்வமாக செயல்பட வேண்டியுள்ளது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு:

யுத்த காலகட்டத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன இலங்கைப் பிரஜைகளை நினைவுகூர்ந்து மூதூரில் கஞ்சி வழங்குவதற்கு செய்திருந்த ஏற்பாடுகளுக்கு அரச அதிகாரிகள் எதிர்வினை ஆற்றியிருப்பது தொடர்பில் நாம் மிகுந்த வருத்தம் அடைகின்றோம்.

தமக்கு நெருக்கமானவர்களின் மரணம் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்கு இருக்கும் மனவேதனையை நாம் ஒரு சமூகம் என்ற வகையில் உணர்வுபூர்வமாக புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், இந்த நாட்டை இருண்ட யுகத்துக்குள் கொண்டுசெல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது ஒட்டுமொத்த சமுதாயத்தினரதும் பொறுப்பாகும்.

அதற்கமைய அரச அதிகாரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இது போன்ற சூழ்நிலைகளின் போது நாட்டின் பொது நலனை முதன்மையாக கருதி செயல்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எமது நாட்டை மீண்டும் இருளில் தள்ளுவதற்கு அதுவே காரணமாக அமையக்கூடும்.

ஆகையால், சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற வகையில் நாம் கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற பல்வேறு துர்ப்பாக்கிய சம்பவங்களினால் உயிரிழந்த மற்றும் காணாமல் போன அனைவரையும் எண்ணி மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

மீண்டும் இதுபோன்ற சூழல்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அவர்கள் அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படுமாறு அனைத்துத் தரப்புக்களிடத்திலும் கேட்டுக்கொள்கின்றோம்- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.பல்கலை. கல்விசாரா ஊழியர்கள் மருத்துவபீடம் முன்பாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டம் திருநெல்வேலி சந்திவரை பேரணியாக சென்று பல்கலைக்கழகத்தை மீண்டும் வந்தடைந்தது.



இலங்கை முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் வேதன முரண்பாடு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு வழங்காது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## கஞ்சி வழங்கியவர்கள் கைதானமை நல்லிணக்கத்துக்கு பெரும் குந்தகம்

### நீதி சமாதான ஆணைக்குழு அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை கைது செய்வது பொறுப்புக்கூறலுக்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பெரும் பின்னடைவாகும் என யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துளளது

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை கைது செய்தல்இதடையேற்படுத்துவது தொடர்பாக யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கப் புள்ளிவிபரங்களின்படி முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் (பாதுகாப்பு வலயம் என்று அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட) அப்போதைய அரச புள்ளிவிபரத்தின் படி மிக நெருக்கமான முறையில் முற்றுகைக்குள்ளாயிருந்த மக்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 70,000 பேர். பல்வேறு பொருளாதாரத் தடைகளுக் குள் வாழ்ந்து கொண்டிருந்த இவர்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

ஒரு நேர உணவைப்பெறுவதே பெரும்பாடாயிருந்த இவர்களது எண்ணிக்கையை மறு பக்கத்தில் ஷெல் வீச்சுக்களும் பல் குழல் பீரங்கித் தாக்குதல்களும் குறைத்துக் கொண்டிருந்தன. யுத்தம் முடிந்து, சரணடைவுகளின் பின் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்தவர்களது எண்ணிக்கை 3 இலட்சத்து 70 ஆயிரமாக இருந்தது. இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுவர உதவியது இம்மக்கள் தம் உடமைகளில் வைத்திருந்த அரிசி, தேங்காய் போன்றவற்றைப் பகிர்ந்து காய்ச்சிய கஞ்சிதான். இதனால் தான் இம் முள்ளிவாய்க்கால் கஞ்சி இவர்களது உயிர் காத்த கஞ்சியாகவும் வரலாற்றுச் சிறப்புப் பெறுகின்றது.

உயிரிழந்தவர்களை நினைவு கூருவதைத் தடுப்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறலாகும். தற்போது பல்வேறு இடங்களில் இடம்பெற்று வரும் முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பரிமாற்ற நிகழ்வுகளை ஆட்சியாளர்கள் தடுக்க முயல்வது குறிப்பாக கிழக்கில் சம்பூர் பகுதியில் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தவர்களை இரவிரவாக கைது செய்து தடுத்துவைக்கப்பட்டிருப்பது மிக மோசமான மனித உரிமை மீறலாகும் - என்று மேலும் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.05.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசிய ஐக்கியத்தில் ஏன் பயம்?

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோது, தமிழ் மக்கள் நெருக்கடியான சூழலில் வாழ்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இதன்போது, தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பிலும் தூதுவர் வினவியிருக்கின்றார். இதற்கு பதிலளித்த தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அது சாத்தியமில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பேசப்பட்ட காலத்திலிருந்து இது சாத்தியமா என்னும் கேள்வியும் கூடவே நடைபோடுகின்றது. இந்தக் கேள்வியை சாதாரண மக்கள் கேட்டால் அது பிரச்னைக்கு உரியதல்ல. மாறாக, அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் கேட்கும்போதுதான் அது பிரச்னைக்கு உரியதாகின்றது.

உண்மையில் சாத்தியமா என்னும் கேள்வி எங்கிருந்து வருகின்றது? இதனை கேட்பவர்கள் யார்? எங்களால் ஒருபோதுமே ஒற்றுமைப்பட முடியாதென்று எண்ணுபவர்கள்தான் இந்தக் கேள்வியை கேட்கின்றனர். தமிழ் மக்களின் நலனை விடவும் தங்களின் பாராளுமன்ற கதிரைகள்தான் முக்கியமென்று எண்ணுபவர்கள்தான் சாத்தியமா என்னும் கேள்வியை கேட்கின்றனர். சார்ள்ஸ் நிர்மலநாதனின் கேள்வியை இந்த அடிப்படையில்தான் புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

ஒரு கேள்வியை கேட்போம் - அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முடியாதா? அந்த அளவுக்குப் பலவீனமான நிலையிலா தமிழ் கட்சிகள் இருக்கின்றன. ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு தமிழ் மக்களால் வாக்களிக்க முடியுமென்றால் - அவ்வாறு வாக்களிக்குமாறு வலியுறுத்த முடியுமென்றால் - ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குகளை குவிக்க முடியாது. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டு - ஓரணியாக பிரசாரம் செய்தால் முடியாதா? - நிச்சயமாக முடியும். ஆனாலும், முடியாது என்னும் பதில் அரசியல் கட்சிகளிடமிருந்து வருகிறதென்றால் பிரச்னை வேறு. அதாவது, தமிழ் கட்சிகள் ஒற்றுமையுடன் ஒரு விடயத்தை முன்னெடுக்கும் வல்லமையுடன் இல்லை. அதனை, தமிழ் கட்சிகளில் சிலர் விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்தும் தமிழினம் சிதறுண்டு போக வேண்டுமென்றே எண்ணுகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் என்பது அடிப்படையில் வேட்பாளரல்ல. மாறாக, தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு தேசிய வேலைத்திட்டத்துக்குள் இணைந்து கொள்வதற்கான பெயர்தான் தமிழ் பொது வேட்பாளர். யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் தொடர்ந்தும் தமிழ் தலைமைகள் பலவீனமடைந்து செல்கின்றன - தமிழ் மக்கள் சிதறுண்டு போகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசிய அடிப்படையில் மக்களை ஓரிடத்துக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. அதற்கு கட்சிகள் மத்தியில் தமிழ்த் தேசிய ஐக்கியம் ஏற் பட வேண்டும். ஏனெனில், கட்சிகளால்தான் தமிழ் மக்கள் சிதறியிருக் கின்றனர். 2010இல் அவர்கள் சிதறவில்லை - 2016இல் சிதறவில்லை. ஆனால், 2020இல் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்தித்தது. அதன் பொருள் மக்கள் கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றனர் - செல்லப்போகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் என்னும் அடிப்படையில் ஓரணியானால் மக்கள் மேலும் ஒரு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தலாம். சிதறியவர்கள் மீளவும் ஓரிடம் வருவர். தமிழ் பொது வேட்பாளர் என்பது ஒரு தமிழ்த் தேசிய மந்திரம். இதனை விளங்கிக் கொண்டால் முன்னோக்கிப் பயணிப்பதில் எந்தவொரு தடையும் இல்லை. தமிழ் அரசு கட்சி இல்லையென்றாலும் முன்னேக்கி செல்லலாம்.


# தமிழினப் படுகொலை சாட்சிய முற்றம் நல்லூரில்

யாழ்ப்பாணம், மே 17

தமிழினத்தின் மீது இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலை வரலாற்றை ஆவணப்படுத்தும் விதமாக நல்லூரில் தமிழின படுகொலை சாட்சிய முற்றம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அண்மையாக அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிடத்துக்கு அருகே "தமிழினப் படுகொலை சாட்சிய முற்றம்" திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அந்தக் கட்சியின் ஆவணப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் "இலங்கை அரச பயங்கரவாதத்தால் நாம் அனுபவித்தவற்றை ஆவணப்படுத்தல்கள் மற்றும் நினைவுகூருவதன் ஊடாக



அடுத்த சந்ததியினருக்கு நாம் இழந்தவற்றையும் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கடத்திச் செல்ல வேண்டும். ஆகவே அனைவரும் ஒரு தடவை வருகைதந்து பார்வையிட்டு செல்லுங்கள்." என்று குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

# சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்த 4 பேர் வடமராட்சியில் கைது!

வடமராட்சி, மே 17

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பகுதியில் சட்டவிரோதமாக இரவு நேரத்தில் கடல் அட்டைகளைப் பிடித்த நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயன்படுத்திய இரு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நால்வரும் வெற்றிலைக் கேணி கடற்படை முகாம் அழைத்து செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் கடல்வளத் திணைக்கள அதிகாரியிடம் கைது செய்யப்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-02)

# கட்டைக்காடு கடற்பரப்பில் 18 பேர் கடற்படையால் கைது

வடமராட்சி, மே 17

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 18 பேர்கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி கடற்படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடி முறைகள் அதிகரித்துள்ளன என்று பொதுமக்களால் குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதன் போது, 18 பேர், 7 படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் சட்ட நடவடிக்கைக்காக யாழ். நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஐ-02)

# கஞ்சி கொடுத்தால் கைது செய்வோம் என்று மிரட்டல்

பொலிஸார் விடுத்தனராம்

திருகோணமலை, மே 17

முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து வழங்கினால் கைது செய்வோம் என்று பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இரவு வேளைகளில் வீடுகளுக்குச் சென்று கஞ்சி கொடுப்பதற்கு தயார் படுத்துகிறீர்களா? தயார் படுத்தினால் கைது செய்வோம் என்று மிரட்டினர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட செயலர் குற்றஞ்சாட்டினர்.


இது தொடர்பில் அவர் விடுத்த செய்திக் குறிப்பில், திருகோணமலையில் பொய் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இனப்படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை தமிழ் மக்கள் சுதந்திரமாக நினைவேந்த அனுமதிக்கப்பட வேண்டும் - என்றும் கூறினார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்- பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதிய முயற்சிகள் கைக்கூடும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரம் தழைக்கும்.

**மிதுனம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்களின் சிலர் உங்களுக்கு உதவி செய்வார்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். திறமைகள் வெளிப்படும்.

**மீனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# தமிழ்நாடு முதன்மை மாநிலம்

## தமிழக அரசு பெருமிதம்

சென்னை, மே 17

சொல்லாத புதிய திட்டங்களையும் முதல்வர் மு. க. ஸ்டாலின் நிறைவேற்றியதால் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் 'சொன்னதை செய்வோம், சொல்லாததையும் செய்வோம்' என்று முழங்கி தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தமிழகத்தை சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்களுக்கு வீடுகள் வழங்கும் 'கனவு இல்லம்' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம், கொரோனா கால கற்றல் இடைவெளியை ஈடு செய்யும் நோக்கில் 'இல்லம் தேடிக் கல்வி' திட்டம், 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்', 'நான் முதல்வன்' திட்டம், 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டம், 'எண்ணும் எழுத்தும்' திட்டம் ஆகியவை செயல்பாட்டில் உள்ளன.

இவ்வாறாக தமிழக முதல்வர், 'சொல்லியதை மட்டுமின்றி சொல்லாததையும் செய்வோம்' என்று கூறி நடைமுறைப்படுத்திய பல்வேறு சிறப்பான திட்டங்களால் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மக்களின் வாழ்வாதாரமும் உயர்கிறது - என்றுள்ளது.

(ஐ)

# புலிகள் மீதான இந்தியாவின் தடை நீட்டிப்பு அர்த்தமற்றது!

## இயக்குநர் கௌதமன்

சென்னை, மே 17

விடுதலைப் புலிகள் மீதான மத்திய அரசின் தடை நீட்டிப்பு என்பது நேர்மையற்ற அறமற்ற ஒரு செயலாகும். இந்தியாவுக்கு எதிராக இந்தியாவே விதித்துக் கொண்ட தடை இது என்று இந்தியா உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை - இவ்வாறு திரைப்பட இயக்குநரும் தமிழ் பேரரசு கட்சியின் பொது செயலருமான வ. கௌதமன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை நீக்கி அது வன்முறை இயக்கமல்ல, தமிழீழ தமிழ்க்குடி மக்களின் விடுதலைக்கான இயக்கம் என்று பிரகடனப்படுத்தியது.




அப்படி இருக்க 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் திட்டமிட்ட தமிழின அழிப்பு நடந்து முடிந்து கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவிலோ அல்லது உலகிலுள்ள எந்தவொரு நாட்டிலோ விடுதலைப்புலி அமைப்பினால் சிறியதொரு அசம்பாவிதம் கூட நடக்காத நிலையில் தமிழ்நாட்டின் மீது பழியை போட்டு இந்திய ஒன்றிய அரசு புலிகளின் மீதான தடையை மேலும் நீட்டித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

புலிகள் மீதான தடை நீட்டிப்பு மூலம் சீன அரசுக்கு இந்திய அரசு உதவி செய்திருக்கிறது என்பதுதான் யதார்த்தத்தின் பேருண்மை. இந்து மாகடலின் அதிகாரம் இந்தியாவிடம் இருக்கவேண்டுமானால் தமிழீழம் தமிழர்களிடமும் விடுதலைப் புலிகளிடமும் இருந்திருக்க வேண்டும். இல்லையேல் ஒருநாள் இந்துமாகடல் சீனாவிடம் இருக்கும். அப்போது இந்தியா யாருக்கு கீழ் இருக்கும் என்பது காலத்துன்கே வெளிச்சம் - என்றுள்ளது.

(ஐ)

# அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பிரதமர் மோடி வெற்றிபெறுவார்!



மும்பை, மே 17

உத்தரப்பிரதேசம் வாரணாசி தொகுதியில் போட்டியிடும் பிரதமர் மோடி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.


மும்பையில் தங்கியுள்ள அவர் நேற்று கருத்து வெளியிடுகையில் தெரிவித்தவை வருமாறு,

இதற்கு முன்பும் நாம் பிரதமரின் தொகுதிகளை பார்த்திருக்கிறோம். வாராணசி நகரம் முற்றிலும் மாறிவிட்டது என அப்பகுதி மக்கள் தற்போது பெருமிதத்துடன் கூற முடியும். பிரதமர் மோடி தனது தொகுதியில் செய்ய வேண்டிய பணிகளை உண்மையாக செய்திருக்கிறார். பிரதமரால் தனது தொகுதிக்கு என்ன செய்ய முடியும் என்பதை அவர் காட்டியுள்ளார்.

இந்த முறை வாரணாசி தொகுதியில் அவர் அதிக வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெறுவார். வாரணாசி தொகுதியில் அவர் செய்ததுபோல் மற்ற எம்.பி.க்களும் தங்கள் தொகுதியில் செய்ய வேண்டும் என அவர் உறுதிபட தெரிவிக்கிறார்.

பெரும்பாலான இடங்களில் பா. ஜ. க. வெற்றி பெறுவதற்கான சூழல் உள்ளது. இது பிரதமர் மோடியின் தேர்தல் என்பதில் மக்கள் தெளிவாக உள்ளனர். வாக்கு அவருக்குத்தான்.

(ஐ)



# திருமாவுக்கு சிகிச்சை!

சென்னை, மே 17

மக்களவைத் தேர்தலை ஒட்டி தொடர்ச்சியாக பிரசாரம் மேற்கொண்ட நிலையில் கால் வீக்கத்துக்காக பெங்களூருவில் சிகிச்சை பெறுவதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலையொட்டி, தொடர்ந்து பிரசாரம் செய்ததால் கால்களில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் சிகிச்சைக்காக பெங்களூரு வந்திருக்கிறேன். ஓரிரு நாட்களில் குணமாகும் என மருத்துவர்கள் கூறியிருக்கின்றனர் - என்றும் கூறினார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600,000 மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பாடசாலை வருகை!

## பாராளுமன்ற வழிமுறைகள் குழு வெளிப்படுத்தல்

கொழும்பு, மே. 17

**6 இலட்சம் பாடசாலை மாணவர்கள் காலை உணவு இன்றி பாடசாலைக்கு வருவதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான பாராளுமன்ற வழிகள் மற்றும் வழிமுறைகள் குழு வெளிப்படுத்தியுள்ளது.**

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் பாடசாலைக்கு சிறுவர்களின் வருகை அதிகரித்துள்ளதாகவும் குழுவில் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், ஆரம்ப தரத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு குழு அறிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்காக வருடாந்தம் 1600 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவி வழங்க விரும்பும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும் குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக நீர் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே. 17

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அந்த நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநாட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட கூட்டம் இந்தோனேசியாவின் பாலி நகரில் எதிர்வரும் 20 ஆம் முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்விசாரா ஊழியர் கொடுப்பனவு இந்த வாரம் தீர்மானம் எடுக்கப்படும்



கொழும்பு, மே. 17

திறைசேரிக்கு கிடைத்துள்ள வரி வருமானத்தை கருத்தில் கொண்டு, கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவுகள் குறித்து இந்த வாரத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக வருடாந்தம் சுமார் 1.3 பில்லியன் ரூபா செலவாகும் என தற்போது மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்தது.

அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதில் வழங்காமைமே பணிப்பகிஷ்கரிப்புக்கு காரணமாகும்.

கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தில் 15 வீத வெட் அறவிடப்படுவது மற்றும் கல்விசாரா ஊழியர்களின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவின் இணை தலைவர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்தார். (அ)

# இலங்கை ஏனைய நாடுகளின் அரசியலில் செல்வாக்கு செலுத்தும் நிலையில் இல்லை

## கூறுகிறார் அமைச்சர் மனுஷ



கொழும்பு, மே. 17

அணிசேரா நாடு என்பதனால் இலங்கை ஏனைய நாடுகளின் அரசியலில் செல்வாக்கு செலுத்தும் நிலையில் இல்லை என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவிவரும் மோதல்களுக்கு தீர்வு எட்டப்படும் எனும் எதிர்பார்ப்புடன் பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம் இஸ்ரேலிய போரை நிறுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இஸ்ரேலுடனான அரசாங்கத்தின் உறவுகளை பாதுகாத்து, இலங்கையர்களுக்கு மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை திசை மாற்ற முயற்சிப்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் வாக்குகளை பெறமுயற்சிப்பதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

விருந்தோம்பல், கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு கடந்த மார்ச் மாதம் இலங்கை மற்றும் இஸ்ரேல் அரசாங்கங்களுக்கு இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, கூடுதலாக 40,000 இலங்கை தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் இளைஞர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சில அரசியல் குழுக்கள் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் இலங்கை இளைஞர்களின் எதிர்காலத்தினை பலிக்கடாவாக்க முயல்வதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டினார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் அடாவடி புரிந்த இராஜாங்க அமைச்சரினால் பரபரப்பு

கொழும்பு, மே. 17

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் பயணிகளின் பயணப்பொதிகளை கொண்டு செல்லும் ஊழியர் ஒருவரை கன்னத்தில் அறைந்து, பாதுகாப்பு அதிகாரிகளையும் அச்சுறுத்தியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

சிங்கள நாளிதழொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது,

குறித்த இராஜாங்க அமைச்சரின் மனைவி உட்பட சிலரின் வெளிநாட்டு பயணமொன்றுக்காக குறித்த இராஜாங்க அமைச்சர் கடந்த புதன்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார் .

அவர் தனது பாதுகாவலர்களுடன் நுழைவுச்சீட்டு வாங்காமல் பிரதான நுழைவாயில் ஊடாக விமான நிலையத்துக்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார். அவரின் பாதுகாவலர்கள் துப்பாக்கியுடன் இருந்ததால் அவற்றை கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது என விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் இராஜாங்க அமைச்சரிடம் கூறியுள்ளனர்.

அப்போது, அவர் பாதுகாப்பு அதிகாரிகளை திட்டி, அவர்களை தனது கைத்தொலைபேசியால் புகைப்படமாகவும் பதிவு செய்துகொண்டுள்ளதாக விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், குறித்த இராஜாங்க அமைச்சருடன் வந்தவர்களின் பயணப்பொதிகளை விமான நிலையத்துக்கு எடுத்துச் செல்வதற்காக வந்த ஊழியருக்கு குறைந்த பணத்தை வழங்கியுள்ளதுடன் அவர் உரிய கட்டணத்தை கேட்டபோது, ஆத்திரமடைந்த இராஜாங்க அமைச்சர், தனது காலணியால் ஊழியரின் காலை மிதித்து, கன்னத்தில் அறைந்து பாதுகாவலர்களுடன் வெளியேறியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்குள்ளானதாக கூறப்படும் ஊழியர், தேவையில்லாத பிரச்னையை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என தெரியவந்துள்ளது . (அ)

# ரஷ்யப் போரின்போது காயமடைந்த இராணுவச் சிப்பாய் நாடு திரும்பினார்

கொழும்பு, மே. 17

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட தனது மனைவிக்கு சிகிச்சை அளிப்பதற்கான பணத்தை திரட்டும் நோக்கில் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் இலங்கையர் ஒருவர் நாடு திரும்பியுள்ளார்.

குருநாகல், கும்புக்கெட்டே பகுதியைச் சேர்ந்த எரந்த சிந்தக்க தென்னக்கோன் என்பவரே இவ்வாறு கடந்த 9 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார்.

வேறு தொழிலுக்காக ரஷ்யா சென்ற தான், பின்னர் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

தனது மனைவிக்கு ஏற்பட்ட புற்றுநோய்க்கான சிகிச்சைக்கு தேவையான நிதியை திரட்டும் நோக்கிலேயே தான் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளதாக எரந்த சிந்தக்க தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்ட தன்னை, முன்வரிசையில் யுத்தத்திற்கு அந்த நாட்டு இராணுவ அதிகாரிகள் அனுப்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையிலேயே தான் யுத்தக் களத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, காயமடைந்ததாகவும் ஆனால், காயமடைந்த தன்னை வைத்தியசாலையில் அனுமதிக்கக்கூட அந்த நாட்டு அதிகாரிகள் முன்வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், ரஷ்யா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தான், நண்பர்களின் உதவியுடன் கடந்த 9 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்ததாக கூறினார்.

தனது மனைவி, குழந்தைகளை ரஷ்யாவுக்கு அழைத்து தேவையான சிகிச்சைகளை இலவசமாக வழங்குவதாக அந்த நாட்டு அதிகாரிகள் உறுதியளித்தபோதிலும், தனக்கு இறுதி வரை சம்பளம் கூட வழங்கவில்லை எனவும் எரந்த சிந்தக்க தென்னக்கோன் குறிப்பிட்டார்.

தனது மனைவியை குணப்படுத்துவதற்காக யுத்த களத்துக்கு சென்று காயமடைந்து பல்வேறு துன்பங்களைத் தான் அனுபவித்தாகவும் அவர் கூறினார்.

எனினும், புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தனது மனைவி கடந்த மார்ச் மாதம் உயிரிழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தன்னை போன்ற பலரை போலி உறுதிமொழிகளை வழங்கி இராணுவத்தில் ரஷ்யா இணைத்து வருவதாகவும், ஆனால் போலி உறுதிமொழிகளை நம்ப வேண்டாம் என ரஷ்ய இராணுவத்தில் இணைந்து துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நாடு திரும்பியுள்ள எரந்த சிந்தக்க தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார். (அ)

# துமிந்தவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, மே. 17

சுதந்திரக் கட்சியில் செயற்படுவதற்கு தடை ஏற்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி கட்சியின் பதில் பொது செயலாளர் துமிந்த திசாநாயக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பதில் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட நிமல் சிறிபால டி சில்வா மற்றும் தமக்கு தடையின்றி கட்சி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக உத்தரவு பிறப்பிக்குமாறு துமிந்த திசாநாயக்க இந்த மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனு மீதான நீண்ட விசாரணை நேற்று முன்தினம் நிறைவு பெற்ற நிலையில் நேற்றுக் காலை தீர்ப்பு அறிவிக்கப்படவிருந்தது.

இந்த நிலையில், மனுதாரர் தமது கோரிக்கை தொடர்பில் திருத்தப்பட்ட மனுவொன்றை தாக்கல் செய்ய முடியும் என கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதான இதன்போது அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருக்குப் பிணை

## வீடு மோசடி தொடர்பான வழக்கில்

கொழும்பு, மே. 17

**குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியலங்காரவை தலா 100 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கு மாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

ஒன் டிரான்ஸ் வொர்க்ஸ் சதுக்கத்தில் நான்கு வீட்டுமனை களை தருவதாகக் கூறி 770 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாக வர்த்தகர் ஒருவர் தனிப்பட்ட முறையில் முறைப் பாடு செய்தபோதே குறித்த நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த ரவி வைத்தியலங்கார சந்தேக நபராக பெயரிடப்பட்டு நீதவான் இந்த உத்தரவை பிறப் பித்துள்ளார்.

ரவி வைத்தியலங்காரவின் வெளிநாட்டுப் பயணத்தை தடை செய்து குடிவரவு திணைக் களத்துக்கு அறிவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபராக பெயரிடப்பட்ட நிறுவனத்தின் சார்பில் பிரதிநிதி ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகி யிருந்த நிலையில், இயக்குநரா கக் கூறப்படும் இந்திய வம்சாவ ளியைச் சேர்ந்த அமித் கத்யால் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு பிடியாணை பிறப்பிக் கப்பட்டது.

நவம்பர் 8, 2018 அன்று, நான்கு வீடுகளை வாங்குவதற்கு 1,399,999 அமெரிக்க டொலர் தொகை வழங்கப்பட்டது. வீடு வழங்கப்பட்ட நிலையில், ரூ.75 மில்லியன் காசோலைகளை வழங்கியதாக வர்த்தகர்களான கம்கானமலாகே சந்திரஸ்ன செய்த முறைப்பாட்டின் பிரகா ரம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

குறித்த வழக்கு தொடர்பில் காணி பதிவாளர் திணைக்களம், காணி பதிவாளர் மற்றும் நிறுவ னத்தின் பணிப்பாளராக கடமை யாற்றிய ஜானகி சிறிவர்தன ஆகிய 09 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேல திக அறிக்கைகளுக்காக எதிர்வ ரும் செப்ரெம்பர் 25ஆம் திகதி வழக்கை மீண்டும் அழைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மாணவி கடத்தல் விவகாரம் நால்வர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே. 17

கல்விப் பொது தராதர சாதா ரண தரப் பரீட்சைக்கு தோற்றி விட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த 16 வயதுடைய பாடசாலை மாணவியை கடத்த முயன்ற சந்தேகத்தின் பேரில் நான்கு இளைஞர்கள் பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கடத்தல் சம்பவம் தொடர் பில் ஓட்டோச் சாரதி ஒருவர் 119 பொலிஸ் அவசர இலக்கத் துக்கு வழங்கிய தகவலின் பிர காரம் உடனடியாகச் செயற் பட்ட அலதெனிய பொலிஸார் வாகனத்தையும் கடத்தல் குழு வினரையும் ஒரு மணித்தியாலத் தில் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரில் ஒருவர் இந்த மாணவியுடன் காதல் தொடர்பு வைத்திருந்த தாகவும் அவர் திருமணமானவர் எனவும் பொலிஸார் தெரிவித்த னர்.

அவிசாவளை பிரதேசத்தில் வசிக்கும் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரான சந்தேக நபர், தனது நண்பர்களுடன் வாடகை அடிப்படையில் பெற் றுக்கொண்ட வாகனத்தை பயன் படுத்தி இந்த பாடசாலை மாண வியை கடத்த முயற்சித்திருந்தாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலனறுவை பிரதேசத்தில் வசிக்கும் சந்தேக நபர், மாணவி யின் சகோதரர் ஒருவரின் வீட் டுக்கு பல முறை சென்றுள்ள நிலையில் இந்த காதல் உறவு ஏற்பட்டுள்ளதாக விசாரணை யில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் திருமணமான வர் என தெரியவந்ததையடுத்து மாணவி அவரை கைவிட்டுச் சென்றதுடன் சந்தேக நபரின் அழுத்தத்தினால் மாணவியின் பெற்றோர், அவரை குலுகம்மான பிரதேசத்தில் உள்ள வீடொன் றில் தங்க வைத்துள்ளனர்.

அங்கிருந்தவாறு பரீட்சைக் குத் தோற்றிவிட்டு வீடு திரும் பிக் கொண்டிருந்த போது மாணவி இவ்வாறு கடத்தப்பட் டுள்ளார். (அ)



# ஓ.எல். பரீட்சையின் பின் கிளிநொச்சியில் மாணவர்களின் முன்மாதிரியான செயல்!

கிளிநொச்சி, மே. 17

க.பொ.த( சா/ த) 2023 (2024) பரீட்சை எழுதிய மாணவர்களின் முன்மாதிரி யான செயற்பாட்டினை பலரும் பாராட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பரீட்சை முடிவடைந்த பின் பாடசாலை சூழலை சிரமதானம் மூலம் சுத் தப்படுத்திய பின் தமது ஞாப கார்த்தமாக மரக்கன்றுகளை நாட்டியுள்ளனர்.

இந்த செயற்பாடு பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

# சம்பூரில் 3 பெண்கள் உட்பட 4 பேர் கைது; ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பிய மனோ

கொழும்பு, மே. 17

சம்பூரில் 3 பெண்கள் உள் ளிட்ட 4 தமிழர்கள் பொலிஸா ரால் இழுத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொலைபே சியில் தொடர்பு கொண்டு கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

அவரது பேஸ்புக் பதிவின் படி, மனோ கணேசன் எம்.பி எழுப்பிய கேள்விகளுக்கு பதில ளிக்க சிரமப்பட்ட ஜனாதிபதி, கைதானவர்கள் நாளை (நேற்று) பிணையில் விடுவிக்கப்படுவார் கள் என குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசன் எம்.பி நேற்று முன் தினம் இரவு தனது பேஸ்புக்கில் பதிவிட்ட தகவல் வருமாறு-

நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொது கொள்கை ஏன் அரசுக்கு இல்லை என ஜனாதி பதி ரணிலிடம் நான் சற்றுமுன் தொலைபேசியில் கேட்டேன். மேலும், தனிப்பட்ட இல்லம் ஒன்றுக்கு தேடிச் சென்று இறந் தவர்களை நினைவேந்தும் பெண்



களை கதற வைத்து, இழுத்து சென்று கைது செய்யும் அள வுக்கு, இலங்கை பொலிஸுக்கு அப்படி என்ன அவசர தேவை இருக்கிறது?" என்று கேட்டேன்.

"இல்லை, அவர்கள் பொலி ஸுடன் முரண்பட்டு உள்ளார் கள். அதனால்தான் கைது. சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அல ஸிடம் கூறிவிட்டேன். பிணை கோரிக்கையை எதிர்க்க வேண் டாம் என பொலிஸுக்கு, சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் கூறி உள்ளார். ஆகவே நாளை விட்டு விடுவார்கள்." என்றார் ரணில்.

"அதெல்லாம் சரி. புலிகள் இயக்கம் தடை செய்யப்பட் டது. அந்த இயக்கத்தின் சின்னங் கள் எதுவும் இல்லாமல் தங்கள் வீட்டில் கஞ்சி காய்ச்சி குடித்த மக்களை ஏன் தேடி போய் பொலிஸ் கைது செய்ய வேண் டும்? தடை செய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்கள் இருந் தால் எப்போதும் கைது செய் யலாம் தானே. ஆகவே இதற் காக ஏன் விசேடமாக நீதிமன்ற ஆணையை கேட்டு பெற வேண் டும்? இதில் என்ன மர்மம் இருக் கிறது?"

"நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொது கொள்கை ஏன் அரசாங்கத்துக்கு இல்லை? தடை செய்யப்பட்ட இயக்கத் தின் சின்னங்கள் இல்லாமல் எவரும் தம் மறைந்த உறவுகளை நினைந்து நினைவேந்தல்களை நடத்தலாம் என அரசாங்கம் அறிவித்தால் என்ன?" என்றும் நான் மீண்டும் மீண்டும் கேட் டேன்.

"இவர்களை நாளை பிணை யில் விட்டு விடுவார்கள், பிணை யில் விட்டு விடுவார்கள்", என்று அவசர அவசரமாக கூறினாரே தவிர, இது தொடர் பில் பொது கொள்கையை அறிவியுங்கள் என்ற கோரிக் கைக்கு உடன் பதில் இல்லை.- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# இராணுவத் தளபதி பற்றிய வீடியோக்களை அகற்ற யூரியூப் உள்ளிட்ட தரப்புக்கு உத்தரவு!

கொழும்பு, மே. 17

இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் விக்கும் லியன கேயை அவமதிக்கும் வகையில் இணையத்தில் வெளியிடப்பட்ட அனைத்து அவதூறு மற்றும் வெறுக்கத்தக்க வீடியோக்கள் மற்றும் தடை செய்யப்பட்ட அறிக்கைகளை உடனடியாக நீக்குமாறு லங்கா வி நியூஸ் இணையத்தளத்தின் உரிமையா ளருக்கு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளார்.

இணையத்தள உரிமையா ளர் மற்றும் யூ ரியூப் உள்ளிட்ட நான்கு நபர்கள் இதுபோன்ற தடை செய்யப்பட்ட அறிக்கை களை மேலும் இணையத்தில் வெளியிடத் தடை விதித்து நீதிமன்றம் நிபந்தனை உத்தரவு பிறப்பித்தது.

மேலும், மே 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகவேண் டும் என்றும் உத்தரவிடப்பட் டுள்ளது.

நிபந்தனை உத்தரவு மற்றும் அழைப்பாணையை எதிர்மனு தாரர்கள் நால்வருக்கும் மின்னஞ் சல் மூலம் அனுப்பவும் நீதிமன் றம் உத்தரவிட்டது.

சமூக ஊடக செயற்பாட்டா ளர் விதாரனகே துஷார சாலிய ரணவக்க எனப்படும் மிச்சேல் ரணவக்க மற்றும் லங்கா வி நியூஸ், ஓவர்சீஸ் ஹறிங் எனப்படும் லங்கா நியூஸ் தரப்பினர் மற்றும் அமெரிக்காவில் உள்ள யூரியூப் நிறுவனத்திற்கு தடை உத்தர வும் நிபந்தனை உத்தரவும் பிறப் பிக்கப்பட்டது.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது, மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன், முதலாவது பிரதிவாதி இணையத்தின் ஊடாக தனது வாடிக்கையாளருக்கு எதிராக பொய்யான, தீங்கிழைக்கும் மற்றும் அவதூறான அறிக்கை களை வெளியிடுகிறார். இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தல் என சட்டத்தரணி நீதிமன் றில் தெரிவித்துள்ளார். (அ)

# காணாமல்போயிருந்த இரு மாணவிகள் மீட்பு!

கொழும்பு, மே. 17

க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கா கப் பரீட்சை நிலையத்திற்கு சென்ற இரு மாணவிகள் காணா மல் போயிருந்த நிலையில் உற வினர் ஒருவரின் வீட்டில் வைத்து நேற்று முன் தினம் இரவு கண் டுப்பிடிக்கப் பட்டுள்ளதாகக் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவிகள் இருவரும் கடந்த 14 ஆம் திகதி அன்று சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கினிகத் தேனை பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றின் பரீட்சை நிலையத்துக்குச் சென்றுள்ள நிலையில் இருவரும் பரீட்சைக் குத் தோற்றாமல் காணாமல் போயிருந்தனர்.

இதனையடுத்து இரு மாண விகளின் உ றவினர்களும் இது தொடர்பில் கினிகத்தேனை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு அளித்ததையடுத்து பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், மாணவிகள் இருவரும் வேலை வாய்ப்புத் தேடி கொழும்பு பிரதேசத்துக் குச் சென்று இருவரும் கடுவலை பிரதேசத்தில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந் துள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தரப்பையும் ஒன்று சேர்த்தே யார் பொது வேட்பாளர் என முடிவு

## கூறுகிறார் வேலன் சுவாமிகள்

யாழ்ப்பாணம், மே. 17

யார் பொது வேட்பாளர் என்ற கேள்வி பலர் மத்தியில் காணப்பட்டாலும் கூட தற்போது அதுபற்றி யாரும் பேசவில்லை. தற்போது பொது வேட்பாளர் என்ற கோட்பாட்டை அனைவரிடமும் கட்டி எழுப்பி அனைத்து தரப்பையும் ஒன்று சேர்த்து அதன் பின்னர் யார் பொது வேட்பாளர் என்பதை முடிவு எடுக்க தீர்மானித்துள்ளோம் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் வவுனியாவில் சிவில் அமைப்புகள் மதத்தலைவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகள் கலந்துரையாடி பொது வேட்பாளர் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதுடன் தமிழர்களுடைய அபிலாசைகளை உலகுக்கு வெளிக்காட்டும் விதத்திலும் தமிழர் வாக்கு தமிழருக்கே என்ற அடிப்படையிலும்தமிழ் தேசிய பாதையில் பயணிக்கின்ற அனைத்து கட்சிகளையும் ஒன்று திரட்டி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு உரிமை சார்ந்த தீர்வை வழங்காது என்பதே கடந்த கால வரலாறு-என்றார். (அ)



## முள்ளிவாய்க்காலில் கஞ்சி வழங்கப்பட்டது

முல்லைத்தீவு, மே. 17

தாயக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இறுதி உயிரை காப்பாற்ற வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி முள்ளிவாய்க்கால் மேற்கு பொதுசந்தை கட்டடத்துக்கு முன்பாக நேற்று காலை வழங்கப்பட்டது.

மேலும், முள்ளிவாய்க்காலில் உயிர்த்த உறவுகளுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுவதை சர்வதேச ஊடகத்தினர் நேரடியாக கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

# தென் மாகாண வைத்தியசாலைகளில் சுகாதார ஊழியர் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே. 17

தாதியர்கள் உள்ளிட்ட 72 தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்று தென் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, நேற்றுக் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தென் மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளிலும் அனைத்து சுகாதார நிலையங்களில் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது என சுகாதார தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட தாமதமே பணிப்பகிஷ்கரிப்பிற்கான காரணம் என சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நீதி தொடர்பில், சுகாதார அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நடைமுறைப்படுத் தப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாகாண மட்டத்திலான பணிப்பகிஷ்கரிப்பை 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை வடமத்திய மாகாணத்தில் ஆரம்பித்தன. (அ)

# போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் அலுவலர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, மே. 17

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை சுற்றிவளைத்து தாக்கியதாகக் கூறப்படும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக நாரஹென்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாரஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் நாரஹென்பிட்டி , மகாவத்த பிரதேசத்தில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்தபோது தாபரே மாவத்தையிலிருந்து எல்பிட்டிகல நோக்கிப் பயணித்த கார் ஒன்று அதிக வேகத்துடன் பயணிப்பதை அவதானித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இந்தக் கார் எல்பிட்டிகல பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் அதில் பயணித்தவர்கள் மதுபானம் அருந்திக் கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, அங்குச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் காரை வீதியிலிருந்து எடுக்குமாறு அவர்களிடம் கூறியபோது சந்தேக நபர்கள் இந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரஹேன்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நீதித்துறை முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றியவர் ரணில்!

## விஜயதாச ராஜபக்ஷ புகழாரம்

கொழும்பு, மே. 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையின் முன்னேற்றத்திற்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்துள்ளார். ஒரு நாட்டுக்கு நீதித்துறை மிகவும் முக்கியமானது என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள் தவிக்கும் நேரத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இருக்க



வில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். தற்போதைய அரசாங்கம் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியது.

அத்துடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஒரு நாடு முன்னேற முடியாது. கடந்த இரண்டு வருடங்களில் எமது நாட்டில் சட்டத்தின் ஆட்சி புத்துயிர் பெற்றுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு ஊழல், இலஞ்ச ஒழிப்பிற்கான புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

நீதித்துறையை வலுப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் மோசடி, ஊழல், குற்றச்செயல்களைத் தடுக்க புதிய சட்டவிதிகள் இயற்றப்படும்-என்றார்.

# 7,000 போதை மாத்திரைகளுடன் கற்பிட்டியில் சந்தேக நபர் கைது

கொழும்பு, மே. 17

கற்பிட்டியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான 7,000 போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அறையொன்றில் மீன் வலைகளால் மூடப்பட்ட நிலையில் 58 பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது கைது செய்யப்பட்டவர் 32 வயதான நபரொருவர் எனவும், இவர் மருந்தகம் ஒன்றில் பணிபுரிந்தவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த போதை மாத்திரைகள் கொழும்பிலிருந்து கற்பிட்டிக்கு கொண்டு வரப்படுவதாகவும் ஒரு மாத்திரை 300 ரூபா என்ற விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் சிறுவர்களுக்கு எதிராக நடக்கும் நிகழ்நிலை துஷ்பிரயோகம்!

## விசாரணை நடத்தும் அமெரிக்கா

கொழும்பு, மே. 17

இலங்கையில் சிறுவர்களின் ஆபாசமான புகைப்படங்களை உருவாக்கி இணையத்தில் வெளியிடுவதற்கு ஒரு குழுவினர் நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியான தகவல் தொடர்பில் அமெரிக்காவைச் சேர்ந்த காணாமல் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளான குழந்தைகளுக்கான தேசிய மையம் முறையான விசாரணையை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பணியகம், கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேராவிடம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும் குறித்த நிறுவனத்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சமந்தி ரேணுகா நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்த நிறுவனம் உலகளாவிய ரீதியில் 181 நாடுகளில் உள்ள சிறுவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது.

விசாரணைகளின் படி, இலங்கையில் உள்ள சிறுவர்களின் புகைப்படங்கள் ஆபாசமான முறையில் உருவாக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டமை குறித்த உண்மையை நிறுவனம் கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளில் எத்தனை சிறுவர்களின் புகைப்படங்கள் ஆபாசமான புகைப்படங்களாக உருவாக்கப்பட்டுள்ளன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான சிறுவர்கள் மற்றும் புகைப்படங்களை உருவாக்கிய சந்தேகநபர்கள் தொடர்பில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்படும் எனவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான உண்மைகளை பரிசீலித்த நீதவான், சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்திற்கு தெரிவிக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பெரும் உரிமைமீறல் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு!

## சர்வதேசம் தலையிட்டு நீதி வழங்க வேண்டும் என்கிறார் ஜெயசிறில்

காரைதீவு, மே. 17

**"உலகின் மிகப்பெரிய மனிதஉரிமைமீறலாக முள்ளிவாய்க்கால் தமிழினஒழிப்பு நாளை அடையாளப்படுத்தமுடியும். இதனை ஊழி உள்ள காலம்வரை எந்ததமிழனும் மறக்க முடியாது. மறக்கவும்மாட்டான்."**

-இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடாத்திய மே 18 தமிழர் இன அழிப்பு நாள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தின் ஓரங்கமாக நேற்று முன் தினம் புதன்கிழமை காரைதீவு பிரதான சந்தைக்கு முன்பாக நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.சசிகுமார் ,சக்தி மீன்பிடிச் சங்கத் தலைவர் கோபால், சமூக செயற்பாட்டாளர்களான கணபதிப்பிள்ளை ஹரிசன், வினாயகம் விமலநாதன், பிரமுகர் தம்பிராசா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

வீதியில் சென்றவர்களுக்கு கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களின் மனதில் நீங்காத நினைவு நாள் முள்ளிவாய்க்கால் மே 18 . தமிழினம் அழிக்கப் பட்ட நாள். கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட எம் மாணவர்களையும் அப்பாவி தமிழர்களையும் கொன்று குவித்த மே 18 நாளை உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் ஒரு போதும் மறந்துவிட முடியாது. இந்த நினைவு நாளை மழுங்கடிக்கச் செய்து மறந்து போக வேண்டும் என்பதற்காக இங்கு யுத்த வெற்றிகள் அரசினால் கொண்டாடப்படுகின்றன.



அது எமது உறவுகளை இழந்த மக்கள் உணர்வு பூர்வமாக இறுதி மரணத்தின் போது இறுதியாக அருந்திய முள்ளிவாய்க்கால் கஞ்சி நிகழ்வேந்தலானது பல பிரதேசங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். மாணவர்கள் அப்பாவி தமிழ் மக்கள் மீது கேட்பார் பார்ப்பார் யாரும் இல்லாமல் கடந்த 2009 ஆம் ஆண்டு கொன்று குவித்தது போல் எதிர்வரும் காலங்களில் நடந்து விடக்கூடாது என்பதற்காக இதனை நடத்துகிறோம்.

எதிர்வரும் காலங்களிலும் எமது எதிர்கால சிறார்கள் இதை புரிய வைக்கவேண்டிய ஒரு தார்மீக பொறுப்பு எமக்கு இருக்கின்றது .எமது மக்கள் மீதான பயங்கரமான-மிலேச்சத்தனமான படுகொலையை செய்த இந்த ஆட்சியாளர்கள் முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக துண்டு துண்டாக சிதைக்கப்பட்டு உயிர் பிரியும்போது அவர்களுடைய திட்டுக்கள் இன்று பலித்திருக்கின்றன. எம் தலைவர்கள் சொன்னது போன்று அவர்களை தெரிவு செய்த மக்களே அவர்களை இந்த நாட்டைவிட்டு-இந்த ஆட்சியை விட்டு விரட்டிய காலம் நடைபெற்றது. இந்த ஆத்மாக்கள் எவ்விதமான குற்றமும் செய்யாமல் தமிழர்களாய் பிறந்த காரணத்தினால் தத்தளிக்க தத்தளிக்க உயிர் பிரியும் போது அவர்களுடைய சிந்தனை அவர்களுடைய ஆத்மாக்களினுடைய விருப்பங்கள் இன்று அரங்கேறி இருக்கின்றன. தமிழினத்தின் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். எமது மக்களுக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும். எதிர்காலத்தில் எமது தமிழர்கள் மீது இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறக் கூடாது என்பதற்காக உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் அனைவரும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றார்கள் .இந்த உறவுகளை இழந்த எங்களுடைய வலிகளை அடக்கி ஆண்டு இந்த தினத்தை நினைவு கூற உறவுகளை நினைவு கூற முடியாது என்று சொல்வதற்கு இங்கு யாருக்கு உரிமை கிடையாது. உயர்நீத்த உறவுகளை ஒவ்வொரு தமிழனும் உணர்வு பூர்வமாக நினைவு கூர முடியும்-என்றார். (அ)

# புனித ஹஜ் யாத்திரைக்கு செல்வோரை வழியனுப்பல்




இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனிதமான மக்கமா நகர் செல்ல இருக்கும் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வழியனுப்பும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம்,சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைன்,காணி உத்தியோகத்தர்,நிதி உதவியாளர், காரியாலயம் உத்தியோகத்தர்கள் மற்றும் ஹஜ் பிரயாணம் செல்லும் உத்தியோகத்தர்களின் துனைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவை கலாசார உத்தியோகத்தர் மௌலவி ரஸ்மி எம்.மூஸா (ஸலபி) நிகழ்த்தினார். (அ)

# நிந்தவூரில் கவிஞர் முஜாமலாவின் இரு நூல்கள் வெளியீடு ஞாயிறன்று

நிந்தவூர், மே. 17

நிந்தவூரைச் சேர்த்த கவிஞர் முஜா மலாவின் இரு கவிதைத் தொகுப்பு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

கடந்த 13 வருடங்களுக்கு மேலாக கவிதை உலகில் புகுந்து எழுதிக்கொண்டிருக்கும் பெண் கவிஞரான முஜாமலாவின் முதல் முயற்சியாக நூலுருவாக்கம் பெற்றிருக்கும் அவரது "நீதம்" மற்றும் "ரூஹின் சிறகுகள்" எனும் கவிதைத் தொகுப்பு நூல்களின் வெளியீட்டு விழாவே சிறப்புற நடைபெறவுள்ளன.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்ப பிரிவு, தந்திரோபாய திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. எப்.எச்.ஏ. ஷிப்லி தலைமையில், நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் வெளியீட்டு விழா இடம் பெறும்.

விழாவில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சாரபீட மொழித்துறை சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதுடன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீட மொழித்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக், துறைத்தலைவரும், சமூகவியல் பேராசிரியருமான, பேராசிரியர் கலாநிதி டாக்டர். எஸ்.எம். அய்யூப், இலக்கிய செயற்பாட்டாளரும் தாதிய உத்தியோகத்தருமான தி.லலிதகோபன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஷான், மாவட்ட கலாச்சார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், கலாபூஷணம் பாவேந்தல் பாலமுனை பாறூக், நிந்தவூர் கலை, கலாச்சார பேரவையின் தலைவர் டாக்டர். ஏ.எம்.ஜாபிர், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன், இலக்கிய செயற்பாட்டாளர் றியாஸ் குரானா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

"வானம்பாடி" எனும் புனைப் பெயரையும் கொண்ட கவிஞர் முஜாமலாவின் "நீதம்" நூல் 54 கவிதைகளைக் கொண்ட தொகுப்பாகவும், "ரூஹின் சிறகுகள்" நூல் 45 கவிதைகளைக் கொண்ட தொகுப்பாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-06)



# பூநொச்சிமுனையில் மினி சூறாவளி

மட்டக்களப்பு, மே. 17

காத்தான்குடி, பூநொச்சிமுனை கடற்கரையில் நேற்று முன் தினம் மாலை வீசிய மினி சூறாவளி காற்றினால் கடற்கரையில் உள்ள மஸ்ஜிதுல் உமர் பள்ளிவாசலின் கூரை உட்பட பல பகுதிகளிலும் சேதம் ஏற்பட்டது.

இதன் போது எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுடன் மஹ்ரூப் எம்.பி. கலந்துரையாடல்

திருமலை, மே. 17

திருகோணமலை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன கல்வி நிலையத்தில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக அங்குள்ள மாணவர் ஒன்றியத்தினால் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் எழுத்து மூலமாக கோரிக்கை ஒன்றினை முன் வைத்திருந்தனர்.

கோரிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்திற்கு அவர் நேரடியாக சென்று மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.



மாணவர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் மற்றும் பிரச்னைகளை நிவர்த்தி செய்யும் முகமாக உரிய அதிகாரிகளுக்கு நேரடியாக தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதுடன் அதற்கான தீர்வுகளையும் விரைவாக வழங்குவதற்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பங்கர் பாடசாலை’ ஆரம்பம் உக்ரைன் சிறார்கள் உற்சாகம்

கார்கிவ், மே 17

**உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த பின்னர் உக்ரைனின் கார்கிவ் நகரில் உருவாக்கப்பட்டிருக்கும் முதல் பதுங்குகுழி (பங்கர்) பாடசாலைக்கு வந்த சிறார்கள் தங்கள் ஆசிரியர்கள், நண்பர்களைச் சந்தித்ததால் பெரு மகிழ்ச்சியடைந்தனர்.**



இரும்புக் கதவுக்கு அருகில் இரண்டு ஆசிரியர்கள் நின்று அவர்களை வரவேற்க காங்கிரீட் படிகளுக்கு கீழே இருக்கும் குண்டு துளைத்த மற்றொரு கதவைக் கடந்து ஒரு தாயும், மகளும் உற்சாகமாக கையை அசைத்தபடி அங்கிருந்த வகுப்பறைக்குள் நுழையும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி கவனம் ஈர்த்துள்ளன.

6 மீற்றர் ஆழத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடசாலைக்கு நூற்றுக்கணக்கான சிறார்கள் வருகை தந்தனர். அதே வேளை, ஆர்வத்துடன் தங்களின் கல்விச் செயல்பாடுகளைத் தொடங்கினர். இந்தப் பதுங்குகுழி பாடசாலை ரஷ்யாவின் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வகையில் பூமிக்கு அடியில் உருவாக்கப் பட்டுள்ளது

இந்த பாடசாலை வகுப்பறைகளில் ஜன்னல்கள் இல்லை. ஆனால் வெளிச்சத்துக்காக மின்விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளன. சுவர்களில் வெள்ளை மற்றும் இளம்பச்சை வண்ணம் பூசப்பட்டுள்ளன.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ், நாட்டின் வடகிழக்கு பகுதியில் ரஷ்ய எல்லைக்கு அருகில் இருக்கிறது. கடந்த 26 மாதங்களுக்கு முன்பு உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடங்கியதில் இருந்து தொடர் தாக்குதலுக்குள்ளாகி வருகிறது.

இந்தப் போர்க் காலத்தில் கார்கிவில் உள்ள பெரும்பாலான குழந்தைகள் தங்களின் கல்வியை இணையம் வழியாக கணனி மூலம் பயின்று வந்தனர். இந்த நிலையில் பங்கர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டடுமை சிறார்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(எ)

# ஸ்லோவாக்கியா பிரதமர்மீது மர்ம நபர் துப்பாக்கிச் சூடு!

## ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்ப்பு

ஹன்ட்லோவா, மே 17

பொதுமக்கள் மத்தியில் மறைந்திருந்த இனந் தெரியாத நபரால் ஸ்லோவாக்கியா பிரதமர் ராபர்ட் பிகோ மீது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த பிரதமர் ராபர்ட் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்லோவாக்கியாவின் ஹன்ட்லோவா நகரில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற பின் பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த பிரதமர் ராபர்ட் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.


இனந் தெரியாத அந்த நபர் நான்கு முறை துப்பாக்கியால் சுட்டதாகவும், இதில் காயமடைந்த பிரதமர் ராபர்ட் சுருண்டு தரையில் விழுந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். முதல்கட்ட தகவலின்படி, பிரதமர் ராபர்ட்டுக்கு தலையிலும், மார்புப் பகுதியிலும் காயங்கள் ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடந்தவுடனேயே பிரதமரின் பாதுகாவலர்களில் இருவர் அவரைப் பத்திரமாக மீட்டு காரில் ஏற்றினர். பின்னர் ஹெலிகொப்டர் மூலம் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஸ்லோவாக்கியாவில் கடந்த செப்ரெம்பரில் பிரதமராக ராபர்ட் பிகோ மீண்டும் ஆட்சிக்கு வந்தார். முதல் சில மாதங்கள் அவரின் ஆட்சி சர்ச்சைகளை எதிர்கொண்டது. உக்ரைனுக்கான இராணுவ உதவியை நிறுத்தியது, அரசு தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவையை நிறுத்தியது என அவரது அரசின் முடிவுகள் சர்ச்சைகளை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

(எ)





# கட்டுக்கடங்காத காட்டுத் தீயால் கனடாவில் 6,000 மக்கள் நிர்க்கதி

ஒட்டாவா, மே 17

கனடாவின் மேற்கு மாகாணமான அல்பெர்டாவில் திடீரென காட்டுத் தீ பரவியது. காற்றின் வேகம் அதிகமாகவிருந்த காரணத்தால் கட்டுக்கடங்காமல் காட்டுத்தீ மளமளவென பரவியது. தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைக்க போராடினர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனப்பகுதியையொட்டி அமைந்துள்ள பீகன் ஹில், அபசன்ட், பிரேரி கிரீக் உள்ளிட்ட நகரில் வாழ்ந்து வரும் 6 ஆயிரம் பொதுமக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இதனால் அங்குள்ள வீதிகள் மற்றும் முக்கிய சந்திகளில் பொதுமக்கள் முண்டியடித்து கொண்டு வெளியேறியதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பலர் காயமடைந்தனர்.

(எ)

# இந்தியா நிலவு பயணம் மேற்கொள்கிறது நம் குழந்தைகளோ உயிரிழக்கின்றனர்!

## பாகிஸ்தான் எம். பி. ஆதங்கம்

இஸ்லாமாபாத், மே 17

இந்தியா நிலவு பயணம் மேற்கொள்கிறது. ஆனால், கராச்சியில் வாழ்ந்து வரும் நம் குழந்தைகள் உயிரிழந்து வருகின்றனர் என பாகிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினர் சையத் முஸ்தபா கமல் கவலை வெளியிட் டுள்ளார். புதன்கிழமை நடந்த தேசிய அவைக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவரது கருத்துக்கள் உலகளவில் கவனம் பெற்றுள்ளன.

“உலக நாடுகள் நிலவில் தரையிறங்குகின்றன. ஆனால், நமது கராச்சியிலுள்ள குழந்தைகள் உயிரிழந்து வருகின்றனர். ஒரு பக்கம் இந்தியா நிலவில் தரையிறங்கியது குறித்த செய்தி வெளியாகிறது. அடுத்த சில நொடிகளில் கராச்சி குறித்த



செய்தி வெளியாகிறது.

கராச்சி பாகிஸ்தானுக்கு வருவாய் ஈட்டித் தரும் பகுதியாக உள்ளது. இரண்டு துறைமுகங்கள் உள்ளன. மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் நுழைவு வாயிலாக இந்த நகரம் உள்ளது. சுமார் 68 சதவீத வருவாயை நாட்டுக்காக ஈட்டித் தரும் நகரமாக விளங்குகிறது.

இருந்தும் கராச்சிக்குத் தேவையான தண்ணீர் கூட வழங்குவதில்லை. அப்படியே தண்ணீர் வந்தாலும் நீரை விற்பனை செய்து வரும் மாபியாக்கள், அதனைப் பதுக்கி மக்களுக்கு பணத்துக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

நாட்டில் 2 கோடியே 62 இலட்சம் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இது 70 உலக நாடுகளின் மக்கள் தொகையை காட்டிலும் அதிகம். நாட்டில் பல பாடசாலைகள் நரகமாக உள்ளன. இந்தியா இன்று வளர்ச்சி காண அந்த நாட்டிலுள்ள கல்வி முறையே காரணம்.

ஆனால், நமது பல்கலைக்கழகத்தில் உலகுக்குத் தேவையானதை நாம் போதிப்பது இல்லை. இதன் காரணமாக வேலைவாய்ப்பு இல்லாமல் நமது நாட்டு இளைஞர்கள் உள்ளனர்” என தனது உரையில் அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# சொகுசு கப்பலில் சீனா வரும் அனைவருக்கும் இலவச வீசா

பீஜிங், மே 17

சொகுசு கப்பலில் சீனாவுக்கு சுற்றுலா வரும் அனைத்து வெளிநாட்டவர்களுக்கும் இலவச வீசா வழங்கவுள்ளதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

சீனாவில் கொரோனா பரவலுக்குப் பின்னர் பொருளாதாரம் பாதாளம் நோக்கிப் பாய்ந்தது. பொருளாதார சரிவை மீட்டெடுக்கும் வகையில் சீனா பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் அது பலனளிக்கவில்லை.

மேலும் ரஷ்யா-உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக சீனா மறைமுகமாக செயல்பட்டு வருவதாக கூறி அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் அதன் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதிப்பதால் அதன் பொருளாதாரம் மந்தநிலையை அடைந்தது.

இந்த நிலையில் சுற்றுலா மூலம் தங்களுடைய பொருளாதாரத்தை மீட்டெடுக்க சீனா முடிவு செய்துள்ளது. இதன்படி சொகுசு கப்பல்கள் மூலம் சீனாவுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலவசமாக வீசா வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.



இதுகுறித்து புதிய சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டு உடனடியாக நடைமுறைக்கு வந்தது. இதன்படி சீனாவின் துறைமுக நகரங்களான ஷாங்காய் உள்ளிட்ட 13 நகரங்கள் வழியாக சொகுசு கப்பல்களில் பயணம் செய்து சீனாவுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச வீசா வழங்கவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரின் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டு குறைக்கப்படும்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே. 17

2030 ஆம் ஆண்டளவில் நாட்டிலுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாக கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

போருக்குப் பின்னர், தற்போதைய மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை ஆராய்ந்து வருகின்றோம்.

எமது நாட்டுக்கு ஏற்றவாறு இராணுவத்தை தயார்படுத்துவது ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் பாதுகாப்புச் சபையின் கடப்பாடு ஆகும்.

அதன்படி, பாதுகாப்பு ஆய்வு 2030 என்ற திட்டத்தின் கீழ் தனி நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எங்களிடம் 208,000 வீரர்கள் உள்ளனர். அதனை ஒரு இலட்சம் வரை கொண்டு வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

நாங்கள் யாரையும் நீக்குவதற்கு எதிர்பார்க்க பார்க்கவில்லை. மேலும், கடற்படை மற்றும்



விமானப்படை பலப்படுத்தப்பட வேண்டும்.

புவியியல் ரீதியாக, நாம் மிகவும் சிக்கலான முக்கியமான இடத்தில் இருக்கிறோம்.

எனவே, கடற்படையை பலப்படுத்துவதையும் ஒரு திட்டமாக செயல்படுத்தி வருகிறோம் -என்றார்.

(அ)



# கிளிநொச்சி மாவட்டத்தின் சாரண ஆணையாளராக விக்னேஸ்வரன்!

கிளிநொச்சி, மே 17

கிளிநாச்சி மாவட்டத்தின் புதிய சாரண மாவட்ட ஆணையாளராக சி. விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநாச்சி மாவட்டத்தின் சாரண மாவட்ட ஆணையாளராக கடமையாற்றிய மு. பிரேம்குமார் சேவைக் காலம் முடிவடைந்தமையால் புதிய மாவட்ட ஆணையாளராக சி. விக்னேஸ்வரன், நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளருக்கான நியமனக் கடிதத்தை பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரித் பெர்னாண்டோ நேற்று வழங்கி வைத்தார்.

புதிய மாவட்ட ஆணையாளர் பளை மத்திய கல்லூரியில் சிறந்த சாரணராக சேவையாற்றி, ஜனாதிபதி விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண் கைதிக்கு கொலை ஒப்பந்தம் வழங்கினாரா சிறை உத்தியோகத்தர்?

கொழும்பு, மே. 17

காலி சிறைச்சாலையின் பெண் சிறைக்காவலர் ஒருவர் அதே சிறைச்சாலையில் பெண் சிறைக்காவலர் ஒருவரை கொலை செய்ய ஒப்பந்தம் வழங்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காலி பொலிஸ் தெரிவித்துள்ளது.

பல்வேறு குற்றச் செயல்களுக்காக காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதி ஒருவருக்கே சிறைச்சாலை காவலர் இந்த ஒப்பந்தத்தை வழங்கியுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைக்காவலரைக் கொல்வதற்கான ஒப்பந்தத்தை ஜெயிலர் தனக்கு வழங்கியதாக அந்தப் பெண் மற்றொரு பெண்ணிடம் கூறினார்.

இதுகுறித்து சிறை கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவித்ததாக போலீசார் தெரிவித்தனர்.

(அ)

# மதுபானம், போதைப்பொருளுக்கு நான் முற்றுப்புள்ளி வைப்பேன்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் உறுதி

கொழும்பு, மே 17

யார் என்ன சொன்னாலும், யார் என்ன செய்தாலும் மது, சிகரெட், போதைப்பொருளை அடியோடு ஒழிப்போம் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"மூச்சு" செயல் திட்டத்தின் 60ஆவது கட்டமாக மஹர, மல்வத்து, ஹிரிபிட்டி மருத்துவமனைக்கு 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மதுபான அனுமதிப் பத்திரங்கள், குறைந்த அளவில் போதையூட்டும் மதுபான வகைகளுக்கான அனுமதிப்பத்திரம் மற்றும் அதிக போதையூட்டும் மதுபான வகைகளுக்கான அனுமதிப்பத்திரம் என பெரும் அரசியல் சூதாட்டம் நடந்து வருகிறது.

இதன் மூலம் வாக்கு சேக



ரிக்க சிலருக்கு பணம் கிடைத்தாலும் நாட்டுக்கும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் பயன் ஏதுமில்லை. அரசியல்வாதிகள் மருத்துவமனைகளுக்கு உபகரணங்களை வழங்குவதைப்போல மது மற்றும் போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து வெளிப்படையாக பேச வேண்டும்.

மதுபான நிறுவனங்கள் இன்று சக்தி வாய்ந்தவையாக மாறிவிட்டன. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய முறையான வரிகளை செலுத்தத் தவறிவிடுகின்றன.

பண பலம் இருப்பதால் மாத்திரம் வரி செலுத்தாமல் இருப்பது ஒருபுறமிருக்க, மறுபுறம் நாட்டு மக்களையும், பிள்ளைகளையும், இளைஞர்களையும் மரண படுக்கைக்கு இட்டுச் செல்கின்றனர்.

வாக்குகளைப் பெறுவதற்காக மதுபான, பியர் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பது உகந்த காரியமல்ல. தற்போது மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகிலும் பியர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றன. எதிர்ப்புகள் வந்தாலும் அவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டே வருகின்றன.

யார் என்ன சொன்னாலும், யார் என்ன செய்தாலும் மது, சிகரெட், போதைப்பொருளை அடியோடு ஒழிப்போம். இது குடும்பத்தின் வளர்ச்சிக்கு காரணமாக அமையும்- என்றார்.

(ஐ)

# ஆறுகளில் நீரின் மட்டம் உயர்வு

கொழும்பு, மே 17

கடந்த சில நாட்களாக நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

களு கங்கை மற்றும் வளவை கங்கை ஆகிய ஆறுகளின் நீர் மட்டம் எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மொரகெட்டிய, மாகுர உள்ளிட்ட பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு பதிவாகியுள்ளது.

எனவே, ஆறுகளை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(ஐ)

மின்சாரக் கட்டணக் குறைப்பு;

# கால அவகாசம் வழங்குமாறு மின்சார சபை கோரிக்கை!

கொழும்பு, மே. 17

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான யோசனைகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க நாளை வரை கால அவகாசம் வழங்குமாறு இலங்கை மின்சாரசபை கோரிக்கை விடுத்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மே மாதம் முதலாம் திகதி ஆணைக்குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும், மின்சாரசபை விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் எதிர்வரும் 10ஆம் திகதி வரை காலத்தை நீடிக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

எவ்வாறாயினும், கடந்த 10ஆம் திகதி இலங்கை மின்சார சபை உரிய முன்மொழிவுகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு மற்றுமொரு நினைவூட்டலை விடுத்துள்ளது.

முன்மொழிவுகளை சமர்ப்பிக்க நாளை வரை கால அவகாசம் வழங்குமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளதாக பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உரிய முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் மின் கட்டணத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும், மின் கட்டண குறைப்பு சதவீதத்தை ஜூலை மாதம் அறிவிக்க முடியும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தால் 10 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மை

கொழும்பு, மே. 17

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் இந்த மாதத்தில் 10 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் பாராளுமன்ற வழி வகைகள் பற்றிய குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், மிகவும் வறுமையான மற்றும் வறுமையான பிரிவுகளின் கீழ் 313,947 குடும்பங்களும் 653,047 குடும்பங்களும் நன்மைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தேசிய அடையாள அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகளில் உள்ள சிக்கல்கள் போன்ற பல்வேறு காரணங்களால் நலன்புரித் திட்டங்களைப் பெறுவதற்கு 200,000 பேர் தகுதியடைந்துள்ளபோதிலும் அவர்களுக்கு உரிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதும் குழுவில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பெரும் எண்ணிக்கையிலான நபர்கள் தவறான தகவல்களை வழங்கி அஸ்வெசும பயனாளிகளாகியிருப்பது புலனாகியிருப்பதால் நலன்புரித் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகவல்களை வழங்கியவர்களின் புள்ளிவிவரங்கள் அடங்கிய அறிக்கையயும் பாராளுமன்ற வழி வகைகள் பற்றிய குழுவிடம் சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## வடக்குக்கு...

செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது யாழ். போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ள ஜனாதிபதி, கிளிநொச்சி வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளார்.

மேலும், வலி வடக்குப் பகுதியில் ஒட்டகப்புலத்துக்குச் செல்லும் பிரதான பாதையையும் உத்தியோபூர்வமாக மக்களிடம் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கொக்குத்...

மாவட்ட செயலகம் தெரிவித்தது.

இதையடுத்து, எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி மனிதப் புதைகுழி வளாகத்தில் வழக்கு அழைக்கப்படும் என்று வழக்குடன் தொடர்புபட்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான கே. எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

மேலும், முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதி அகழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதனால், இந்த வீதிக்குப் பதிலாக மாற்றுப் பாதையை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யவும் - அகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல்களை வழங்குமாறு நீதிமன்றம் கொக்கிளாய் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் 29ஆம் திகதி கொக்குத்தொடுவாயில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் குழாய் பொருத்துவதற்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூடு எச்சம் அடையாளம் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 39 எலும் புக்கூடுகள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் இலக்கத் தகடுகள் மற்றும் உடைகள் என்பவை மீட்கப்பட்டன.

இதேவேளை, தொல்லியல் திணைக்களத்தை சேர்ந்த ஆய்வாளர் ராஜ் சோமதேவ சமர்ப்பித்த அறிக்கையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் 1994 - 1996ஆம் ஆண்டுக்கு இடைப் பட்டவை என்று கூறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையில்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈவிரக்கமற்ற முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்று 15 வருடங்களாவதை குறிக்கும் நிகழ்வு சிட்னியின் டவுன்ஹோலில் இந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தமிழ் ஈழத்திற்கும் இலங்கைக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதி தருணங்களில் மே 2009 இல் இடம்பெற்றது.

சர்வதேச ரீதியில் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் அல்ல யுத்த சூன்ய வலயம் தாக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் - பலர் பொது மக்கள் - பலர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் இருந்தவர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

170,000 தமிழர்கள் அந்த ஈவிரக்கமற்ற யுத்தத்தின் இறுதிக் காலங்களில் கொல்லப்பட்டனர்.

இந்த குற்றங்களுக்கு காரணமானவர்கள் இன்றும் இலங்கை இராணுவத்திலும் அரசாங்கத்திலும் உயர் பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றனர்.

இன்றுவரை தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் ஒடுக்கு முறையை எதிர்கொள்கின்றனர்.

பலர் அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எங்கள் தேசம் தனது இதயத்தை அவர்களுக்காக திறக்கவேண்டும். அவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பை வழங்க வேண்டும் - என்றார். (அ)

## ஜூன்...

தெரியப்படுத்துமாறு மொட்டு கட்சி ஜனாதிபதியிடம் கோரியுள்ளது. அதே போல அமைச்சர்கள் சிலரும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே ஜூன் முதல் வாரத்தில் இது பற்றி ஜனாதிபதி தெரியப்படுத்துவார் என தெரியவருகின்றது.

பாராளுமன்ற உரை சாத்தியப்படாத பட்சத்தில், ஜூன் 16 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறும் ஐ.தே.க.வின் கூட்டத்தின்போது தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிவிப்பார் என ஐ.தே.க தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## காயமடைந்த...

இதன்போது, பந்தயக் கார் ஒன்று கவிழ்ந்ததை அடுத்து, கார் ஒன்று பார்வையாளர்கள் மத்தியில் புகுந்தது. இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், இந்த விபத்து தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 20ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## உயர்தர...

வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து கல்வி அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

கடந்த புதன்கிழமை நிறைவடைந்த க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஏற்கனவே அறிவித்திருந்தார்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் வெசாக் விடுமுறையின் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன. பரீட்சைகளை நிறைவு செய்துள்ள மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகள் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபம் கிடைக்கப் பெறாத அதிபர்கள் அவற்றை மாகாண மற்றும் வலய கல்வி திணைக்களங்களில் பெற்றுக் கொள்ள முடியும் - என்றும் குறிப்பிடப்பட்டது. (ஐ)

## தடையை...

ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்கீழ் தடுத்து வைக்கப்பட்டனர்.

நகர்த்தல் பத்திரம் மூலம் இது தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் வழக்கில் வாதாடிய சு. சுகாஷ் வழக்கு தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதி இந்த வழக்கில் எதிரிகள் ஐ. சி. சி. பி. ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையால் அவர்கள் தொடர்பான அறிக்கையை துரிதமாக நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மூதூர் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவதற்கு பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை அகற்றுவதாகவும் கட்டளை பிறப்பித்தார்.

இந்த வழக்கில் கைதானவர்கள் சார்பில் பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் சட்டத்தரணிகள் தாமாகவே முன்னிலையாகியிருந்தனர். இதற்காக அவர்களுக்கு தான் நன்றி கூறுவதாகவும் இந்த வழக்கானது தமிழ் - முஸ்லிம் இன ஒற்றுமைக்கு வலுச்சேர்க்கின்ற வழக்காக இருக்கும் எனவும் தெரிவித்தார். (ஐ)

# இரத்தினபுரியில் ஆர்ப்பாட்டம்

இரத்தினபுரி, மே 17

இரத்தினபுரி தும்பர தோட்டத்தில் இடம்பெற்ற தோட்ட நிர்வாகத்தின் அடாவடித்தனத்தை கண்டித்து நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வாரம் கிரியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பர தோட்டத்தில் உதவி முகாமையாளர் தோட்டத் தொழிலாளரான இளம் தம்பதியினரை குறித்த தோட்டத்தின் தோட்ட குடியிருப்பிலிருந்து வெளியேறுமாறு தாக்கி அச்சுறுத்தியதில் ஒரு பெண் தொழிலாளி காயப்பட்டுள்ளார்.

இந்த அடாவடித்தனத்தை கண்டித்தும் எதிர்த்தும் மலையக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை ஒன்றிணைத்து மலையக சிவில் உரிமைகளுக்கான இயக்கம் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது. (எ)

## ரஷ்யாவுக்கு...

செயலாளர், முன்னாள் ரஷ்யாவின் தூதுவர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று உடனடியாக ரஷ்யாவிற்கு அனுப்பப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து ரஷ்ய உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்களின் கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. சுற்றுலா விசாவில் இலங்கையர்கள் சிலர் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முப்படைகளிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்கள். ரஷ்யாவுக்கு எத்தனை பேர் சென்றிருக்கிறார்கள் என்ற கேள்விதான் தற்போதைய பிரச்னையாக காணப்படுகிறது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் படி ரஷ்யாவில் 600-800 வரையிலானவர்கள் அல்லது அதற்கு அதிகமானவர்கள் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசாங்கம் என்ற வகையில், ரஷ்யாவில் இருக்கும் இலங்கையின் ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் போரில் பங்கேற்றிருப்பது தொடர்பில் தகவல் வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு நன்றி. ரஷ்யாவில் இவர்கள் தங்கியிருக்கும் பிரதேசம் தொடர்பில் அறிய முடியாமல் இருப்பதே தற்போதைய சிக்கலாகும்.

ரஷ்ய குடியுரிமை வழங்குவது போன்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆள் கடத்தல்காரர்கள் இவர்களை ரஷ்யாவிற்கு அழைத்துச் சென்றுள்ளதாக அறிய கிடைத்துள்ளது. இந்த ஆள்கடத்தல் செயற்பாடுகளில் இராணுவ உயர் அதிகாரியொருவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்திருக்கிறது.

எவ்வாறாயினும் ரஷ்யாவிற்கு ஆட்களை அனுப்புவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை நிலைமையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பின்னர், இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அங்கு சென்றுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியும் என நம்புகிறோம். அரசாங்கம் அதற்காக முழுமையாக அர்ப்பணிக்கும்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடு சென்றிருக்கும் நிலையிலும், ரஷ்ய - உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர்கள் குறித்து ஆராய்வதற்கான விஷேட தூதுக்குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்ய தூதுவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ரஷ்யாவுக்கு அனுப்பப்படவுள்ளது. இது குறித்து ரஷ்ய தூதரகத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்-என்றார். (அ)

## சிரட்டையில்...

இதன்போது, வீதியில் சென்ற பலருக்கும் மாணவர்களினால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் மன்னார் - நானாட்டான் பஸ் நிலையத்திலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தோருக்காக அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மழைக்கு மத்தியில் இடம்பெற்ற நிகழ்வில், மதத் தலைவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நேற்று கிளிநொச்சி, உழவனூர் பகுதியில் நிகழ்வு இடம்பெற்றது.

உழவனூர் இளைஞர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. (அ)

## பாராளுமன்றம்...

இருப்பினும் ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கம் ஒருபோதும் தோற்றம் பெறவில்லை. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப் படுத்த பாதுகாப்புத் தரப்பினர் அர்ப் பணிப்புடன் செயல்பட்டுள்ளார்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள் என்பன தற்போதும் நடைமுறையில் உள்ளன. சிறந்த அரச நிர்வாகத்துக்காகவே இவை அறிமுகப்படுத்தப்பட்டன. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன அரச அதிகாரிகள் ஊடாக செயல்படுத்தப் படுகின்றன. ஆகவே, அரச நிர்வாகத்தின் ஏற்பாடுகளை பாதுகாக்க வேண்டும்.

இலங்கை ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறது. ஆகவே, ஜனநாயகம் இல்லையேல் எதுவுமில்லை. 2022ஆம் ஆண்டு போராட்டத்தின்போது நாட்டில் ஜனநாயகம் என்பதொன்று இருக்கவில்லை.

தனிநபர்கள் சட்டத்தை கையிலெடுத்தார்கள். பாராளுமன்றத்தை தீக்கிரையாக்க முயற்சித்தார்கள். பாராளுமன்றத்தை தீக்கிரையாக்கி - மக்கள் பிரதிநிதிகளை கொலை செய்ததன் பின்னர் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியுமா என்பதை போராட்டக்காரர் கள் சிந்திக்கவில்லை.

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை பாதுகாக்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அரச நிர்வாகத்தின் குறைகளை சுட்டிக்காட்டும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. குறைகளை விமர்சிப்பதுடன், நிறைகளையும் குறிப்பிட வேண்டும். நெருக்கடியான சூழலின்போது ஊடகங்கள் நாட்டுக்காக பொறுப்புடன் செயல்படவேண்டும்.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களை கொண்டுள்ளவர்கள்தான் இவ்வாறு கூறுகிறார்கள். பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக வெளியான செய்திகள் பொய்யானவை. நாட்டில் சிறந்த சூழல் உருவான தன் பின்னர் உரிய நேரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நிதி இராஜாங்க அமைச்சர் செஹானுக்கு கொலை மிரட்டல்

கொழும்பு, மே 17

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பில் கோட்டை பொலிஸ் நிலையம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



இது தொடர்பான தொலைபேசி அழைப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்துக்கு கிடைத்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவை எதிர்வரும் தேர்தலுக்கு முன்வர அனுமதிக்கப் போவதில்லை எனவும், தனது அச்சுறுத்தலை புறக்கணித்தால் கொலை செய்துவிடுவேன் எனவும் தொலைபேசியில் அச்சுறுத்திய நபர் கூறியுள்ளார்.

இதன்படி, இராஜாங்க அமைச்சரின் முறைப்பாட்டின் அடிப்படையில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (எ)

# "ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே ஏனைய தேர்தல்கள் நடத்தப்படும்"

ஹம்பரண, மே 17

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட்டு பின்னர் ஏனைய தேர்தல்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறியுள்ளார்.

ஹம்பரண பிரதேசத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# போரில் மரணித்தவர்களுக்கு தலைநகரில் நினைவேந்தல்!

கொழும்பு, மே 17

**போரில் உயிரிழந்தவர்களுக்கு கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா புத்தர் சிலைக்கு அருகாமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.**

வடக்கிலும், தெற்கிலும் மரணித்தவர்கள் நம்மவரே, எம் தாய் நாட்டில் தம் உயிரை இழந்த அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனையோடு மௌனம் செலுத்தி அஞ்சலி செய்வதற்கு அனைவரும் கைகோர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தோடு, நாம் மாறிவிட்டோம் என்று சத்தியம் செய்வதற்கும், நாம் நம்மை அறிந்து கொண்டோம் என்று சொல்வதற்கும் விளக்கொன்றை ஏற்றுவதற்கு வருகை தருமாறும் ஏற்பாட்டாளர்களால் கோரப்பட்டுள்ளது.

மேலும், யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்றுவதற்கும் மனித நேயம் மிக்க நட்புரீதியிலான கூட்டத்தில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சென்னையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு ஏற்பாடு

சென்னை, மே 17

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் நடைபெறவுள்ளதாக மே 17 இயக்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மே 17 இயக்கத்தின் ஏற்பாட்டாளர் திருமுருகன் காந்தி தெரிவித்தவை வருமாறு,

கடற்கரையோரத்துக்கு மக்களை நெருக்கித் தள்ளினார்கள். மணல்வெளியில் ஒளிந்துகொள்ள இடமின்றி குழந்தைகளோடும், கோடைகால வெப்பத்துடனும் குண்டுமழையை எதிர்கொண்டார்கள். மே 15 ஆம் திகதி இனப்படுகொலை நடக்க இருக்கிறதென ஐ.நாவுக்கான இனப்படுகொலை தடுப்பு மேற்பார்வையாளர் பதறிப்போய் அறிக்கை வெளியிடுகிறார்.

இதற்கு முதல்நாள் மே 14 ஆம் திகதி போர்ச்சூழலில் சிக்குண்ட குழந்தைகளுக்கான ஐ. நா. மேற்பார்வையாளர் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தென எச்சரிக்கிறார். ஐ.நாவின் தலைமைச் செயலாளர், போர்முனைக்குச் சென்று மக்களை பாதுகாக்க - மேற்பார்வையிட தனது துணை அதிகாரியான விஜய் நம்பியாரை அனுப்பி வைக்கிறார். போர் நிறுத்தத்துக்கும், மக்கள் பாதுகாப்புக்குமான கோரிக்கையை நிராகரித்து படைகள் முன்னகர்கின்றன.

வெய்யில் அதிகமாக இருக்கிறதென்று சொல்லி விஜய்நம்பியார் தனது அறையை விட்டு வெளியேற மறுக்கிறார். துப்பாக்கிகளை மௌனிக்கிறோம் மக்களை காத்திடுங்கள் என சாட்சிகள் முன்னிலையில் வாக்குறுதி பெற்று வெளியே வருகிறவர்களை குண்டுகள் துளைக்கின்றன.

ஐ.நாவால் போர் தடுப்புக்கு அனுப்பப்பட்ட விஜய் நம்பியாரின் உடன்பிறந்த அண்ணன் சதீஷ் நம்பியார் எட்டு ஆண்டுகளாக வழிநடத்திய இராணுவத்தின் தளபதிகள் வெள்ளைக்கொடிகளை குருதியால் சிவப்பாக்கிக் கொண்டிருக்க, ஐ.நாவின் மனித உரிமை அவையில் இந்த போரை பாராட்டி தீர்மானத்தை முன்னகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

இன்று இதேபோன்று மிகக் குறுகிய நிலத்துக்குள் பலஸ்தீன மக்களை நெருக்கித்தள்ளி படைகளை ஏவி இருக்கிறார்கள். மே 6 ஆம் திகதி முன்னகர்த்த படைகள் தாக்குதலை தீவிரமடையச் செய்திருக்கின்றன.

ரபா என்பதும், முள்ளிவாய்க்கால் என்பதும் உலகின் வெவ்வேறு பகுதியில் இருந்தாலும், அங்கே சிதறிக்கொண்டிருப்பதும் மனிதம் தான். உலகெங்கும் ரபாவுக்காக குரல்கள் உயர்கின்றன. பலஸ்தீனத்தின் முள்ளிவாய்க்காலாக ரபா வேட்டையாடப்படுகிறது. மௌனம் கலைத்து எழுந்து நிற்போம்.

தமிழின இனப்படுகொலையை, உலகுக்கு நினைவூட்ட மே 19 ஆம் திகதி சென்னை பெசன்ட் நகர் கடற்கரைக்கு அழைக்கிறோம்.- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# தமிழர்களுக்கு நீதி கிடைக்காது; சம்பூர் சம்பவம் நல்ல உதாரணம்

**சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்தது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கட்டமைப்பு**

யாழ்ப்பாணம், மே 17

தமிழர்களுக்கு இலங்கையில் நீதி கிடைக்கப் போவதில்லை என்பதற்கு சம்பூர் சம்பவமே மிக அண்மைய நல்ல உதாரணமாகும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டு போர்க் குற்றங்களுக்கான நீதியையும் அரசியல் நீதியையும் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையின் பேரினவாத அரச படைகளினதும் பொலிஸாரினதும் புலனாய்வுத் துறையினரதும் பல்வேறு அடக்குமுறை நெருக்குதல்களுக்கு மத்தியில் போர் வலி சுமந்த மக்களாக போரில் கொல்லப்பட்ட, உயிரிழந்த எம் உறவுகளுக்காக கடந்த 14 வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வேதனையோடும் நீதி எதிர்பார்ப் போடும் செய்கின்றோம்.

போர்க்காலத்தில் பட்டினிச்சாவை தவிர்ப்பதற்காக செல்லடினாலும், குண்டுத் தாக்குதலிலும், ஆங்காங்கே இரத்த வெள்ளத்தில் சதைப்பிண்டங்களாக உறவுகள் வீழ்ந்து கிடைக்க கஞ்சிக்கு வரிசையில் நின்றதை மறக்க முடியாதவர்களாக ஒவ்வொரு வருடமும் உப்புக்கஞ்சி பகிர்ந்து நினைவுகளை மீட்கின்றோம்.

அவ்வாறே இவ்வருட நினைவேந்தலில் ஆரம்ப நாளில் கஞ்சி பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சம்பூரில் மூன்று பெண்கள் உட்பட நால்வரை கைது செய்து ஐ. சி. சி. பி. ஆர். இன் கீழ் 14 நாட்கள் தடுப்புக் காவலில் சம்பூர் பொலிஸார் வைத்துள்ளனர்.

இது போரின் வலி சுமந்து நீதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் அனைத்துத் தமிழர்களையும் மௌனிக்க செய்து தண்டிக்கும் இனவாத வன்முறையாகும்.

இதனை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் உடனடியாக விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடக்க இடம் கொடுக்கக் கூடாது.

கஞ்சி பகிர்தல் எந்த வகையில் இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும்? என்று கேட்பதோடு ஒன்று கூடுதல் மற்றும் கஞ்சி பகிர்தல் மூலம் தொற்று நோய் பரவுமென யாரால்? அறிவித்தல் விடுக்கப்பட்டது எனவும் சம்பூர் பொலிஸாரிடம் கேட்கின்றோம்.

அங்கு பொலிஸார் பெற்றுக் கொண்ட தடை உத்தரவின் அடிப்படை நோக்கம் இனவாதமாகும். இதுவே இனமுறுகலைத் தோற்றுவிக்கும் செயல்பாடாகும். இத்தகைய குற்றத்தை செய்த சம்பூர் பொலிஸார் எந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவர்.

யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்ட நாட்டில் இனப்படுகொலை துன்பியல் நினைவுகளோடு இன அழிப்புக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்தவர்களாக நினைவேந்தலைச் செய்யும் நாம் நீதிக்கான ஆயுதமாகக் கஞ்சியையும், கஞ்சி சிரட்டையுமே தூக்கி நிற்கின்றோம். இதனை இனவாத நோக்கத்தில் சட்டத்தின் துணைகொண்டு தட்டிப் பறித்து புத்தரின் போதனை மிதித்து அவரின் பிச்சை பாத்திரத்தையே தட்டிப்பறிப்தற்கு சமமாகும் என இவ் வைகாசி மாதத்தில் வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்.

எதிர்வரும் சில நாட்களில் பௌத்தர்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடவுள்ளனர். அப்போது தெற்கில் மட்டுமல்ல வடக்கு - கிழக்கிலும் பௌத்தர்களும், சிங்கள பௌத்த இராணுவத்தினரும் வீதிகளில் தான சாலைகளை அமைத்து வீதியில் பயணிக்கும் மக்களை நிறுத்தி குளிர் பானங்களையும், உணவுகளையும் பகிர்வர்.

தொற்று நோய் பரவுமென அப்போதும் சம்பூர் பொலிஸார் இதனை செய்யவிடாது தடுப்பார்களா? யாராவது நீதிமன்றத் தடை உத்தரவைப் பெறுவார்களா? இல்லையே!. தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் தர்ம சாலைகளையும், பௌத்த பாராயணம் ஒலி பெருக்கி சத்தங்களையும் இனமுரண்பாட்டுக்கு உரிய ஒன்றாகவே நாம் பார்க்கின்ற போதும் அதற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாடவில்லை. இன, மத நல்லிணக்கமென நாமும் அமைதி கொள்ளும்போது எம்மைச் சீண்டிவிடும் செயல்பாட்டில் எவரும் ஈடுபடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

தமிழர்களுக்கு இந்த நாட்டில் நீதி கிடைக்கப் போவதில்லை என்பதற்கு சம்பூர் சம்பவமே மிக அண்மைய நல்ல உதாரணமாகும். இதனை சர்வதேசம் உணர்ந்து தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றங்களுக்கான நீதியையும் அரசியல் நீதியையும் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வர வேண்டு மென முள்ளிவாய்க்கால் 15 ஆம் நினைவு ஆண்டில் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org